# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

சுதந்திரம்
சமத்துவம்
சகோதரத்துவம்
எனும் மனித
குலத்தின்
மாபெரும்
இலட்சியங்களுக்காக
இடையறாது
உழைப்போம்.

வெளியீடு-23 | 01 ஏப்ரல் 2005 | விலை:- 07.00


# மாற்றம் வேண்டும்.

## அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியமானதே!

இன்று ஜனாதிபதி அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் அதிகார பகிர்வு பற்றி பேசும் போது ஆங்காங்கே ஆவேசமானதும், கனிவானதும், முணுமுணுப்பானதுமான எதிர் குரல்கள் எழாமல் இல்லை.

இலங்யையின் அரசியல் யாப்பு மாற்றப்பட போவதாக எதிர்குரல்களில் பல பெரும் கவலை கொண்டுள்ளன. 1978இல் தற்போது இருக்கும் அரசியல் யாப்பு எந்த சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டது எந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது. என்ன நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டது என்பனவெல்லாம் எமது சிந்தனைக்குரியது. என்னவோ எமது மக்களுக்கு மறதிக்குணம் அதிகம்.

1977 ஆகஸ்டில் ஒரு இனக் கலவரத்தை நடத்தி முடித்து விட்டுத்தான் ஜே.ஆர். இந்த அரசியல் யாப்பை கொண்டுவந்தார். இந்த அரசியல் யாப்பு கொண்டுவரப்பட்ட கையோடுதான் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டு வடக்கு-கிழக்கில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. அரச பயங்கரவாதம் என்ற சொல் மிகவும் துலக்கம் பெற்றதும் இக்காலத்தில்தான்.



1977 இல் யாழ்ப்பாண நவீன சந்தைத் தொகுதி எரிக்கப்பட்டது, 1980 இல் நூல் நிலையம் எரிக்கப்பட்டது. தெற்கில் வசித்த தமிழர்களை 1977, 80, 83 திட்டமிட்ட இன வன்முறைகள் மூலம் வடக்கு கிழக்கிற்கு அனுப்பியது.

வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்ற கருத்தை அழுத்தம் பெற வைத்தது, எல்லாமே ஜே.ஆரின் கைங்கரியம்தான். உங்களுக்கு போர் வேண்டுமானால் போர் சமாதானம் வேண்டுமானால் சமாதானம் சிங்கள மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டிய காலகட்டம் வந்து விட்டது போன்ற இன மேலாதிக்க வகைமைப்பட்ட வார்த்தைகளை நினைத்த மாத்திரத்தில் உதிர்ப்பதற்கும் அதிகார போதை புரையேறிப் போவதற்கும் இந்த அரசியல் யாப்பு வழிவகுத்ததென்றால் அது மிகையல்ல.

1970களின் பிற்பகுதியில் இருந்து 1980களின் முற்பகுதி வரை நிகழ்ந்த சம்பவங்களில் இந்த அரசியல் யாப்பின் பங்களிப்பையும் நாம் பிரித்து பார்க்க முடியாது. இவ்வரசியல் யாப்பு தேசிய, இனவிரோத செயற்பாடுகளை தீவிரப்படுத்தியது மாத்திரமல்லாமல் தொழிலாளர் விரோத போக்கையும் கொண்டிருந்தது.



தோழர் துரைரட்ணம் தலைமையில் இடர் நிவாரணப்பணிகள்

1980களின் முற்பகுதியில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் தொழிற்சங்க உரிமைகளை பறிப்பதற்கும் அவர்களை நடுத்தெருவிற்கு அனுப்புவதற்கும் 1980இல் இருந்து அடுத்தடுத்து நிகழ்ந்த வன்முறைகளில் மலையக மக்களின் கணிசமான பகுதியினர் வடக்கு கிழக்கிற்கு துரத்தப்படுவதற்கும், இந்தியாவிற்கு அகதிகளாக புலம் பெயர்வதற்கும் இது பங்களித்திருக்கிறதென்றால் அது மிகையல்ல.

ஏன் கடந்து வந்த கால்நூற்றாண்டு கால அனர்த்தங்களில் இந்த நாடு பெற்றுக் கொண்ட அவலங்களில் இந்த அரசியல் யாப்பின் பங்கு என்ன என்பதையும் பார்க்க வேண்டும்.

ஜனாதிபதியை சகல இன மக்களும் சேர்ந்து தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரு நிலை இருப்பதாகக் கூறுகிறார்கள். சிறுபான்மையினரின் தயவுடனேயே ஒருவர் ஜனாதிபதியாக வரமுடியும் எனக் கூறுகிறார்கள்.

ஆனால் கடந்த 25 வருடங்களில் இதனால் சிறுபான்மையினருக்கு குறிப்பிடத்தகுந்த நன்மைகள் எதுவும் கிட்டியதாக கூறிவிடமுடியாது. சகல தார்மீக நெறிமுறைகள், விழுமியங்கள் யாவற்றையும் உதாசீனம் செய்தே ஜே.ஆர். தான் தொடர்ந்து பதவியில் அரசனாக இருப்பதற்கான அரசியல் யாப்பை கொண்டு வந்தார். இந்த அரசியல் யாப்பு எப்போதோ மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

தொடர்ச்சி 2ம் பக்கம்



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் தோழர் சிறிதரனும் மற்றும் தோழர்களும்



## கந்தன் கருணைப்படுகொலை நினைவு நாள் மார்ச் 30



# கண்ணோட்டம்



## ஜே.வி.பி எழுச்சி

ஜே.வி.பி தென்னிலங்கையில் ஒரு நிர்ணயகரமான சக்தியாக உருவெடுத்து வருவது உண்மையே. பிரதானமாக கிராமப்புற வறிய மக்களின் குரலாக ஜே.வி.பி தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. இடதுசாரி பாரம்பரியம், சிங்கள தேசியவாதம் இவை இரண்டின் சந்திப்பில் ஜே.வி.பி உருவாகியது உண்மையே. ஆனால் இவர்கள் சிறுபான்மை மக்களுக்கு எதிரான குண்டர் அரசியல் நடாத்தியதில்லை.

மலையக மக்களின் வாக்குரிமையை பறித்தவர்களையும் 1977ல் இருந்து தொடர்ந்து தமிழர்கள் மீது இன வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டவர்களையும், போற்றி புகழும் தமிழ் ஊடகங்கள் ஜே.வி.பியை பழித்தும், குரோதமாகவும் எழுதுவதும், பேசுவதும் இனப்பிரச்சினை தொடர்பான அதன் அரசியல் குறைபாட்டிற்கு ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் போதாமை தொடர்பானது அல்ல. மாறாக ஜே.வி.பி சார்ந்த சமூகப் பிரிவினர் மீது தமிழ் ஊடகங்களுக்கு பாரம்பரியமாக இயல்பாகவுள்ள வெறுப்பும் அதற்கு காரணம்.

சிலர் தமிழ் தேசியம், ஒரு கருத்தியலாக இருப்பதாகவும் அதுவொரு சமூக இயக்கமாக மாற வேண்டும் என்றும் ஆதங்கப்படுகிறார்கள். ஜே.வி.பி கிழக்கில் முஸ்லீம் மக்கள் மத்தியில் தமது வேலைகளை கொண்டு செல்லும் முறைமையை உதாரணமாக குறிப்பிடுகிறார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜே.வி.பி கிழக்கில் பரவலான பாராட்டைப் பெற்றுள்ளது. அரசியல் என்பதை தவிர தெற்கில் அரசியலை பணம் சம்பாதிக்கும் ஒரு தொழிலாக கருதியவர்கள் ஜே.வி.பி இன் எழுச்சியினால் விரக்தியடைந்துள்ளனர்.

தமிழ் தேசியம் ஒரு கருத்தியல் என்பது பொருத்தமற்ற சொற்பிரயோகம். தமிழ் தேசியம் எப்போதோ தமிழ் பாசிசமாக மாறிவிட்டது. தமிழர்கள் மத்தியில் சமூக வேலைகள் மற்றைய சமூகங்களில் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்பித்தது இங்கு குறிப்பிடப்படவேண்டியது. 1930களில் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் சுதந்திரத்திற்கும், சமூக சீர்திருத்தத்திற்குமான இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றது. இதன்பின்னர் இடதுசாரி இயக்கங்கள் தீண்டாமைக்கு எதிரான இயக்கத்தை கிராம மட்டத்தில் முன்னெடுத்துச் சென்றனர்.

தமிழ் தேசிய இயக்கமும் ஆரம்பத்தில் வடக்கு கிழக்கில் 1960 களில் முஸ்லீம்களையும் உள்வாங்கிய பரந்த தன்மையையும் கொண்டிருந்தது. ஆனால் சமூக அமைப்பில் தீவிர மாற்றம் வேண்டும் என்பதில் அது வெறுப்புக் கொண்டிருந்தது.

1970களின் பின்னர் தமிழ் தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான இயக்கத்தின் ஒருபகுதி வடக்கு கிழக்கில் தமிழ் சமூகத்தினுள் சாதிரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் தொடர்பாகவும், முஸ்லீம்கள் தொடர்பாகவும், தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாகவும், ஒடுக்கப்பட்ட வறுமையில் உழலும் சிங்கள மக்கள் தொடர்பாகவும் அக்கறை கொண்டிருந்தது. தமிழ் தேசியத்தின் கோரமுகமாக உருப்பெற்ற தமிழ் பாசிசம் இந்த ஆரோக்கியமான வளர்ச்சியை இடை வெளியை தகர்த்தெறிந்தது. தற்போது வான்கோழிகளை மயில்கள் போல் ஆடச்சொல்லுகின்ற போர்வழிகளின் தத்துவ சமூகவியல் வறுமையை என்னென்பது.

தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகம் ஏற்படுத்தப்படாமல், ஜனநாயக இடைவெளி உருவாகாமல் சமூக சாதகமான செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பம் உருவாகும் சாத்தியமில்லை.

# உப்பரிகைத்துயரம்

யாரும் எந்த மனிதப்படுகொலையையும் ஆதரிக்கமுடியாது. அண்மையில் நடந்த படுகொலையும் அதற்கு விதிவிலக்கல்ல. வஞ்சகப்படுகொலை என புலிகளின் தலைவர்கள் வர்ணித்திருந்தார்கள்.

வஞ்சகப்படுகொலைகள் எவ்வாறு ஆரம்பித்தன எவ்வாறு விஸ்வரூபம் எடுத்தன என்பதும் தமிழ் சமூகத்தில் கொலைச் சந்தை எவ்வளவு வெற்றிகரமாக இயங்குகிறது என்பதும் யார் அதன் மொத்த குத்தகைக்காரர்கள் என்பதும் வாய்மூடிமௌன பீதியில் உறைந்து போயிருக்கும் தமிழர்களுக்கோ சக இன மக்களுக்கோதெரியாத சங்கதி அல்ல.

துரோகிகள் என்ற முத்திரையுடன் எத்தனை பேர் தெருநாயைப் போல் சுடப்பட்டிருப்பார்கள் சுடப்படுகிறார்கள் இவர்களின் வதைமுகாம்களில் எத்தனை பேர் கண்மூடித்தனமாக இரத்தவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அமிர்தலிங்கம் யோகேஸ்வரனுடன் அவர்கள் விருந்தோம்பிய தேனீரை அருந்திய படி அவர்களை சுட்டுக்கொன்றது சாப்பாட்டினுள் நஞ்சுவைத்துகொன்றது, பக்கத்தில் படுத்திருந்தவனை நள்ளிரவில் கொல்லைப்புற வாழைத்தோட்டத்தினுள் அழைத்துச் சென்று கொன்றது,அளவளாவ வந்ததாகக் கூறி சபாலிங்கத்தை அவர் வீட்டு விறாந்தையில் வைத்து கொன்றது, போராட வந்த எம்சமூகத்தின் புதிய தலைமுறையினரை சந்தி சந்தியாகவைத்து கொளுத்தியது ஒற்றுமைப்படுவோம் என்று சொல்லியே மற்றைய தலைவர்களையும் போராடவந்தவர்களையும் சாமானியர்களையும் கொன்றது.

பள்ளிவாசலில் வைத்து தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களை கொன்றது, எல்லைகிராமங்களில் உறங்கிக்கொண்டிருந்த பெண்களையும் குழந்தைகளையும் கொன்றது, வைத்திய கல்லூரி வாசலில் வைத்து மருத்துவத்துறைப் பேராசிரியை கொலை செய்யப்பட்டது, முன்னாள் இந்தியப்பிரதமர் ரஜீவ்காந்தியை சிறிபெரும்புதூரில் வைத்து படுகொலைசெய்தது இவையெல்லாம் எந்த ரகத்தில் சேர்த்தி இவர்களுடைய முகம்களிலும் சோகம் கப்பி இருந்தது வியப்பை ஏறப்டுத்துவதாக இருக்கிறது.

ஆனால் அவர்களுடைய தலைவர் சாக்குருவிகளுடன் அல்லவா வாழ்பவர். சாவோலம் கேட்காமல் தூங்கவே முடியாதவர். ரூமேனியர்களின் ஐதீகங்களிலுள்ள ரான்சில்வேனியா ரகுலாகோயிலின் மூலவிக்கிரகம் போன்றவர் அல்லவா அவர்.

நீங்கள் அழுவதைப்பார்க்க மானிடர்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கோபி அனானுக்கு விளங்குவது எதிரிகளுக்கு விளங்கவில்லை என அரசியல் துறைப்பொறுப்பாளர் அங்கலாய்க்கிறார். கோபிஅன்னான் இலங்கையில் பிறந்திருந்தால் அதுவும் தமிழராகப்பிறந்திருந்தால் தற்போதுள்ள அவரது அறிவாற்றலுடன் அவர்புலம்பெயராமல் இருந்திருப்பாரானால் அவர் துரோகியாக என்றோ மரணித்திருப்பார். அவரது காலம் இறந்தகாலமாக இருந்திருக்கும். அதிஸ்ட வசமாக அவர் நாகரிகமான சமூகத்தில் பிறந்துவிட்டார்.

யாரையும் நோகடிக்க இதனை எழுதவில்லை. இது எமது வாழ்வின் மிகநீண்டகால கசப்பான யதார்த்தம். இனியாவது மனிதர்களை துப்பாக்கிகளினூடாக பார்ப்பதை விட்டொழியுங்கள்.

சுனாமி- சகோதரப்படுகொலை வன்முறைகளில் கொல்லப்பட்டவர்களின் துயரங்கள் எதுவும் கௌசல்யனின் உற்றசுற்றத்தினரின் துயரங்களை விட எவ்விதத்திலும் குறைந்தவையில்லை. தமிழ் ஊடகங்கள் பாசாங்காக அழுகின்றன.

நீங்கள் அறிமுகப்படுத்திய படுகொலைகளுக்கான முடிச்சுகளை நீங்கள் தான் அவிழ்க்கவேண்டும். நீங்கள் படுகொலைகளை நிறுத்துவீர்களானால் அது தமிழ்சமூகத்திற்கு மனித நாகரிகத்திற்கு கிடைத்த மகத்தான வெற்றி. அசோகனுக்கு ஏற்பட்டதுபோல ஒரு மனமாற்றம் ஏற்படாதா என்று பகுத்தறிவிற்கப்பாற்பட்ட ஒரு நப்பாசை. அவ்வளவுதான்.

**நன்றி: தமிழ்நீயூஸ்வெப்**

## மாற்றம் வேண்டு..........

1ம் பக்கத் தொடர்ச்சி

இன அடிப்படையிலும், நிர்வாக அடிப்படையிலும் அதிகாரங்கள் பிராந்தியங்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நாட்டின் அபிவிருத்தியில் முன்னேற்றத்தில் பெரும்பாலான மக்கள் பங்களிப்பு செய்வதற்கான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். தமிழர்கள் மாத்திரமல்ல முஸ்லீம்கள், மலையக மக்கள் தமது தாம் வாழும் பிரதேசங்களில் சுயாதீனமான வளர்ச்சியைகாண விரும்புகிறார்கள்.

நீதி நிர்வாகத்துறையிலும் இத்தகைய கோரிக்கைகள் எழுகின்றன. மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் மாகாண மட்டத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்படுகின்றன.

இந்தியாவில் பஞ்சாயத்து அமைப்பின் மூலம் கிராமப்புற மக்களின் முகங்களில் இந்திய அளவில் வெளித்தெரிவதற்கான அபிலாசைகளை வெளிக்கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

எமது நாட்டில் கதாநாயகர்களை நாம் தேடிக்கொண்டு இருக்கிறோம். தனி மனிதர்கள் கதாநாயகர்களை இரட்சகர்களை விட்டால் வேறு கதியில்லை என்ற மனோபாவம் எமது நாட்டில் காணப்படுகிறது. சாதாரண மக்களின் செயற்பாட்டிற்கான இடைவெளி உருவாக்கப்பட வேண்டும். ஜனநாயக சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு தீவிர அரசியல் யாப்பு சீர்திருத்தமும் அவசியமானது.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les,**
**Gonnesse Cedex,**
**France.**

**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg,**
**Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn,**
**U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17,**
**Switzerland.**

**P - Box No: 7183**
**Arumpakkam,**
**Chennai - 106,**
**India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
**☎ 021 222 2022,**

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
**☎ 065 22 22307**

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
**☎ 026 22 27118**

**141A , மன்னார் ரோட்**
**குருமன்காடு,**
**வவுனியா.**
**☎ 024 22 23102**

**சென்செபஸ்த்தியார் வீதி**
**மன்னார்.**
**☎ 023 22 32822**

# வலிவடக்கு ஆதாயம் தேடும் அரசியல்வாதிகள்.


அராஜகவாதிகளினால் எரிக்கப்பட்ட எஸ்.எல்.எவ்.பி அலுவலகம்

வலிவடக்கு பிரதேசத்திலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பு வலயங்கள் காரணமாக சொந்த வீடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாமல் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும், உறவினர்கள், நண்பர்களது வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மக்கள் தமது சொந்த இடங்களுக்கு, இருப்பிடங்களுக்கு திரும்பிச் செல்லவேண்டும் என்று கேட்பது நியாயமானது அவர்களது கோரிக்கையையும், கோபத்தையும் உதாசீனம் செய்து விட முடியாது.

ஆனால் அவர்களையும், அவர்களது கஷ்டங்களையும், அதனால் அவர்களுக்கு இருக்கும் கோபத்தையும் புலிகளும், கூட்டமைப்பு எம்பிக்கள் சிலரும் தமது அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்தி வருவது வேதனைக்குரியது

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். அவர்களைப் போன்றே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

இதற்கு ஏதுவாக யுத்தநிறுத்தத்தை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பயன்படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உண்ணாவிரதம் என்றும், பேரணி என்றும், மகஜர் கொடுப்பது என்றும் ஆர்ப்பாட்டம் செய்வதில் காட்டப்படும் அக்கறை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதில் காட்டப்படுமானால் அந்த மக்கள் நிரந்தரமாகவே தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப தானகவே வழிபிறக்கும்.

புலிகளின் பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் தலைவரின் உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம், சமாதானத்துக்கும் தயார் போருக்கும் தயார், பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டோம், என்று தினமும் யுத்த முனைப்புடன் சமிக்ஞைகளை விடுத்துக் கொண்டே உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக்குடியமரவிடு என்று கோரிக்கையையும் முன்வைத்தால் எங்ஙனம் சாத்தியமாகும்.

மீண்டும் யுத்தம் தொடரும் என்ற அச்சம், சந்தேகம் நிலவும் வரை யுத்தத்திற்கான தயாரிப்புக்களில் இருதரப்பும் ஈடுபடுவது நிறுத்தப்படாது என்பது பாமரனுக்கும் தெரிந்த உண்மையாகும். எனவே யுத்தம் பற்றிய அச்சம் நீடிக்கும் வரை இராணுவகாவல் அரண்களும், சோதனைச் சாவடிகளும், பாதுகாப்பு வலயங்களும் விரிவடைந்து செல்வதற்கு வழியாகுமேயன்றி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான வழியை திறந்துவிடாது.

இந்நிலையில் போராட்டம் என்ற பேரில் இடம்பெறும் பேரணிகள், மகஜர் கையளிப்புக்கள் மூலம் சமாதான முயற்சிகள் வெற்றி பெறாமலே சொந்த இடங்களுக்குத் திரும்பிவிடலாம் என்ற பொய்யான நம்பிக்கையை இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உண்டாக்கி அந்த நம்பிக்கையில் சமாதான முயற்சிகளை இழுத்தடிக்கும் புலிகள் தரப்பு தவறை மூடி மறைத்து அந்த மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரி பத்திரிகை 20.03.2005 ஆசிரியத் தலையங்கத்தில் இந்த போராட்டங்கள் பயனற்றவை என்று வர்ணித்துள்ளது.

பேரணிகள் கண்ட பயன் தான் என்ன? என அப்பத்திரிகை கேள்வி எழுப்பியுள்ளதுடன் இராணுவ முகாம்களை அகற்றி உயர் பாதுகாப்பு வலயத்தை இல்லாமலாக்குவதன் மூலமே வலிவடக்கு மக்கள் மீளவும் தமது குடியிருப்புக்களில் வாழ முடியும் என அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதற்காக அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ள வழிமுறை பற்றிய கேள்விகள் இருப்பினும் பாதுகாப்பு வலயம் இருக்கும் வரை மீளக் குடியமர்தல் சாத்தியமில்லை என்ற கூற்று யதார்த்தமானது.

கூட்டமைப்பு எம்.பிக்கள் இடம்பெயர்ந்துள்ள வலிகாமம் வடக்கு மக்கள் மீது கொண்ட அக்கறையினால் தான் இந்த போராட்டங்களில் சம்பந்தப்படுவதாக யாரும் நினைத்து ஏமாந்துவிடக் கூடாது.

**தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை தமது ஆதாயத்திற்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள் என பேரணியில் பங்குபற்றிய மக்கள் கூறியது தான் உண்மை. வாக்குப் பொறுக்குவதும், தமது எஜமானர்களிடம் பெயரெடுப்பதுமே அவர்களின் பிரதான இலக்குகள். இவற்றிலிருந்துதான் அவர்களது அக்கறை பிறக்கிறதேயொழிய கஸ்டப்படும் இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்களிலிருந்து அவர்களது அக்கறை தோன்றவில்லை. உண்மையாகவே இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களின் துன்பங்களை பொறுக்க முடியாமல் அவர்களது அக்கறை பிறந்திருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து அல்லற்படும் முஸ்லிம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு பேரணியை ஏன் தலைமை தாங்கி நடாத்தவில்லை?**

நாம் எமது மண்ணில் மீளக் குடியேறி வாழ விரும்புகிறோம், தடைசெய்யாதீர்கள்! என்று கோரி கடந்த 18.03.2005 அன்று பேரணி நடாத்திய மக்கள் இதனை ஓரளவு விளங்கிக் கொண்டிருப்பது போல அன்று இடம்பெற்ற சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

**பேரணி முடிவடைவதற்கு முன்மாவை சேனாதிராஜா அங்கிருந்து வெளியேறிய தால் பேரணியில் பங்குபற்றியவர்கள் ஆத்திரமடைந்து எமக்கும் சிந்திக்கும் ஆற்றல் உண்டு. இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் மக்களாகிய எம்மை ஏமாற்றாதீர்கள். வெறும் அரசியல் இலாபங்களுக்காக மட்டும் எம்மை பயன் படுத்த எண்ண வேண்டாம். எமது பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாத உங்களுக்கு இனிமேல் வாக்களிக்க மாட்டோம் என உணர்ச்சியை கொட்டித் தீர்த்திருக்கிறார்கள்.**

**பேரணியின் இறுதியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் பா.உ. ஈழவேந்தன் உரையாற்றியபோது "பேசிக் கொண்டிருக்கிறதை விட்டிட்டு உருப்படியாக ஏதாவது செய்து எங்களை எங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போக வழிகாட்டுங்கள்" என்று கோஷமிட்டனர் இதனால் ஈழவேந்தன் எம்.பி உரையாற்றுவதை நிறுத்தி மேடையை விட்டு இறங்கிச் செல்லும் நிலை தோன்றியுள்ளது.**

தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை தமது ஆதாயத்திற்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள் என பேரணியில் பங்குபற்றிய மக்கள் கூறியது தான் உண்மை. வாக்குப் பொறுக்குவதும், தமது எஜமானர்களிடம் பெயரெடுப்பதுமே அவர்களின் பிரதான இலக்குகள். இவற்றிலிருந்து தான் அவர்களது அக்கறை பிறக்கிறதேயொழிய கஸ்டப்படும் இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்களிலிருந்து அவர்களது அக்கறை தோன்றவில்லை. உண்மையாகவே இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களின் துன்பங்களை பொறுக்க முடியாமல் அவர்களது அக்கறை பிறந்திருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து அல்லற்படும் முஸ்லிம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு பேரணியை ஏன் தலைமை தாங்கி நடாத்தவில்லை?

கூட்டமைப்பு எம்பிக்களாயினும் இடம்பெயர்ந்த வலிவடக்கு மக்கள் மீது அக்கறை கொண்டவர்கள் யாராயினும் சாத்தியப்படுத்த முடியாத கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் என்ற பேரில் அந்த மக்களை அலைக்களிப்பதை விடவும் அவர்களது கஷ்டங்களைப் போக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு சாத்தியமான இதர வழிவகைகளை ஆராய்ந்து கோரிக்கைகளை முன்வைத்து அவற்றை பெற்றுக்கொள்வதற்காக போராடுவது அந்த மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் பயன் உள்ளது. அத்துடன் சமாதான முயற்சிகளுக்கு கேடு விளைவிக்காமல் வலுவூட்டுவதாயும் அமையும்.

இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாதபடி உயர்பாதுகாப்பு வலயம் தடையாக உள்ளது. இந்தப் பிரச்சினை தமிழ் மக்களின் ஒட்டுமொத்த பிரச்சினையின் தீர்வுடன் தொடர்புபட்டதாக உள்ள காரணத்தினால் பேரணிகளை நடாத்தி மகஜர்களை கையளிப்பதன் மூலம் அந்த மக்கள் திரும்பிச்செல்ல முடியும் என்று அவர்களை ஏமாற்றுவதை விடுத்து தற்காலிகமான மாற்று ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும். தமிழ் மக்களின் ஒட்டுமொத்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இடைக்கால ஏற்பாடு பற்றி பேசுபவர்கள் இந்த விடயத்தில் ஏன் அத்தகைய தற்காலிக ஏற்பாடு பற்றி யோசிக்கக் கூடாது? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பது போன்று இடம்பெயர்ந்து மீளக்குடியமர முடியாதுள்ள மக்களின் ஒப்புதலுடன் பொருத்தமான இடங்களில் இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கப்படலாம், இடப்பெயர்வால் தொழில்வாய்ப்பை இழந்துள்ள அந்தமக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கலாம் அவர்களது பிள்ளைகளுக்கு தொழில்வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படலாம். அவர்களது பிள்ளைகள் கல்வி பயில்வதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். சுகாதார வசதிகள் மற்றும் மருத்துவ வசதிகள் கிடைப்பதில் உள்ள குறைபாடுகளை சீர்செய்யலாம். இத்தனைக்கும் மேலாக அரசிடமிருந்து நஷ்டஈட்டை கூட பெற்றுக்கொடுக்க முயற்சிக்கலாம்.

இவை சாத்தியமானதும், சாத்தியமானால் அந்த மக்களின் வாழ்க்கை மேம்படவும் வழியேற்படும் இதனை விடுத்து சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைத்து நடாத்தப்படும் போராட்டங்கள் காலத்தை விரயமாக்குவதுடன் அந்த மக்களின் வாழ்க்கையை, வாழ்நிலையை பின்தள்ளுவதாகவே அமையும்.

நாங்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள முகாம்களில் மலசலகூடம் அமைத்துத் தாருங்கள், எங்கள் பிள்ளைகள் படிக்கும் கூரையில்லாத பாடசாலைக்கு கூரை போட்டுத் தாருங்கள், கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்களை தந்துதவுங்கள். நாங்கள் குடியிருக்கும் நிலம் எங்களுக்கு சொந்தமில்லை என்பதால் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவிகளை எமக்கு வழங்க கிராம சேவையாளர் மறுப்புத் தெரிவிக்கிறார் அவற்றை பெற்றுத் தாருங்கள். நாங்கள் தங்கியிருக்கும் காணியை காணி உரிமையாளரிடம் பேசி விலைக்குப் பெற்றுத்தாருங்கள், இவ்வாறு அவர்களின் கோரிக்கைகள் ஏராளம். அரச அதிகாரிகளிடமும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமும், அரசியல் கட்சித் தலைவர்களிடமும் அவர்கள் அலைந்து திரிந்த அளவிற்கு அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பயன்படுத்தி இவற்றுக்கு தீர்வுகாண வக்கற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதத்திலும், பேரணியிலும் கலந்து கொண்டு அந்த மக்களை மீளக்குடியமர்த்தப் போகிறார்களாம். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்வார்களாம்.

# ஹோட்டல் ருவண்டா

(100 நாட்களில் 800,000 கொலைகள்) திரைப்படம் பற்றி பார்ப்பதற்கு முன் ருவண்டாவைப் பற்றிய சில குறிப்புகளை பார்ப்பது நல்லது.

## ருவண்டா (Rwanda)

புரண்டி, தன்சானியா, உகண்டா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டது ருவண்டா. மொத்தம் 26,338 சதுர கி.மீ.

**இயற்கை வளங்கள்:** தங்கம், தகரம், மெதனேன் போன்றவை

**சனத்தொகை:** 7,954, 013 **சராசரி வாழ்வுக்காலம்:** 39.18 வருடங்கள்

## இனக் குழுக்கள்

ருட்சி 15விகிதம் 84விகிதம், ருவா 1விகிதம்.

## மதம்

ரோமன் கத்தோலியம் 56.5 விகிதம், புரட்டஸ்ரான்ற் 26 விகிதம், முஸ்லீம் 4.6 விகிதம், அட்வென்ஸ்ட் 11.1 விகிதம், மற்றவை 1.8 விகிதம் (2001).

## சுதந்திரம்

1962 ஆடி 1ம் நாள் (பெல்ஜியம்-நிர்வாகம்-ஐக்கிய நாடுகள் நம்பிக்கை வலயம்).

## வரலாறு

கி.மு 1000 - கூற்று மக்கள் ருவண்டாவில் வாழத்தொடங்குகின்றனர்.

14-15ம் நூற்றாண்டு ருட்சி மக்கள் குடி பெயர்கின்றனர்.

18ம் நூற்றாண்டு ருட்சி மக்கள் பெரும்பான்மை ருவண்டாவை ஆட்சிசெய்கின்றனர்.

1890 யேர்மன் ருவண்டா அரசை கைப்பற்றுகின்றனர். பின்னர் யேர்மன ருவண்டா ஆக மாறுகிறது.

1916 முதலாம் உலக போரின் போது பெல்ஜியம் ருவண்டாவை கைப்பற்றுகின்றனர்.

1946 ஐக்கிய நாடுகள் நம்பிக்கை வலயமாக மாறுகிறது.

ஆடி 1ம் நாள் 1962 சுதந்திரம் பெறுகிறது.

சுதந்திரத்துக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் (1959) கூற்று பெரும்பான்மையினர், ருட்சி சிறுபான்மையினரின் மாநிலஅரசை கைப்பற்றுகின்றனர். அதன் பின்னர் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படுகின்றனர்.

சுமார் 150,000 பேர் அகதிகளாக அண்டை நாடுகளை தஞ்சம் கோருகின்றனர். இதன் பின்னர் ருட்சி சிறுபான்மையினர் இவர்களின் சந்ததியினர் ருவண்டா தேசிய அணியை உருவாக்கினர்.

1990ல் உள்நாட்டு போர் மூண்டது. உகண்டா அரசின் உதவியுடன் ருட்சி சிறுபான்மையினர் ஆட்சியை கைப்பற்றுகின்றனர்.

1994ல் சுமார் 800,000 பேர் வரையில் இறந்துள்ளனர். (பெரும்பான்மையினர் ருட்சி சிறுபான்மையினர்).

ஆடி 1994யில் ருட்சி சிறுபான்மையினர், கூற்று பெரும்பான்மை அரசை வெற்றி கொள்கின்றனர். சுமார் 2,000,000 கூற்று பெரும்பான்மையினர் அண்டை நாடுகளை தஞ்சம் அடைகின்றனர்.

2003 - தேர்தலில் ருவண்டா தேசிய அணி வெற்றி பெறுகிறது.

## 1994 படுகொலைகள்

சுமார் 100 நாட்களில் 800, 000 கொல்லப்பட்டுள்ளனர்.

1994 சித்திரை ருவண்டாவின் அதிபர் Habyarimana விமான விபத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

9-10 சித்திரை- கூற்று பெரும்பான்மையினர் ருட்சி சிறுபான்மையினரை கொலை செய்யத் தொடங்குகின்றனர். ஐ.நா படைகள் சுடுவதற்கு மறுக்கின்றனர்.

9-10 சித்திரை - வெளிநாட்டு அரசுகள் தமது பிரசைகளை தமது நாடுகளுக்கு அழைத்தனர் (பிரான்ஸ், பெல்ஜியம், அமெரிக்கா)

11 சித்திரை - ஐ.நா படைகளின் வெளியேற்றதின் பின்னர் பாடசாலையில் அவர்களால் பாதுகாக்கப்பட்ட சுமார் 2,000 பேர் கொலை செய்யப்படுகினடறனர்.

21 சித்திரை: ஐ.நா படைகளின் எண்ணிகை 90 விகிதத்தால்குறைக்கப்படுகின்றது.

15 வைகாசி: ரெட் குறொஸ் சுமார் 500,000 கொல்லப்பட்டுள்ளனர் என கருதுகிறது.

17 வைகாசி: ஐ.நாவுகும் ஐ. அமெரிக்காவுக்கும் ஏற்பட்ட பிணக்கினால் புதிய ஆயுதம் தாங்கிய படைகளின் வரவு தாமதமாகிறது.

19 வைகாசி: ருட்சி சிறுபான்மையினர் வடக்கு கிழக்கு பகுதிகளை கைப்பற்றுகின்றனர்.

22 வைகாசி: 2500 பிரென்ச் படைகளை தரை இறங்குகின்றனர்.

04 ஆடி: ருட்சி சிறுபான்மையினர் மிகுதி பகுதிகளை கைப்பற்றுகின்றனர்.

18 ஆடி: ருட்சி சிறுபான்மையினர் போர் முடிந்து விட்டது என அறிவிக்கினறார்கள்.




தோழர் பத்மநாதன் எஸ்.எல்.எம்.எம் அலுவலகத்தில் முறைப்பாடு



தயாநிதியின் குடும்பம் உறவினர்கள் ஆற்றொனா துயர்



சுனாமி முகாமில் இறுதி அஞ்சலி

# ஹோட்டல் ருவண்டா

*நெறியாள்கை: ரெறி ஜோர்ஜ்*

*எழுத்து:- கீர் பியர்சன், ரெறி ஜோர்ஜ்*

(ருட்சி சிறுபான்மையினர், கூற்று பெரும்பான்மையினர்)




ருட்சி சிறுபான்மையினரை கூற்று பெரும்பான்மையினர் கரப்பான் பூச்சி எனத்தான் அழைப்பார்கள்.

கூற்று இனத்தை சேர்ந்த போல் ருசபஜினா (டொன் சடில்), ருட்சி இனத்தை சேர்ந்த ரற்றினா (சோபியா ஓக்கன்டியோ) வை திருமணம் செய்து பிள்ளைகளும் உள்ளனர்.

போல் பெல்ஜிய முதலாளிக்கு சொந்தமான மில்லிஸ் கொலின்ஸ் என்ற நட்சத்திர கோட்டலில் முகவரா க(மனேஜர்) உள்ளார்.

1994 ன் படு கொலைகளின் போது எவ்வாறு 1,268 ருட்சி சிறுபான்மையினரை காப்பாற்றி னார் என்பதே கோட்டல் ருவண்டா திரைப்படம்.

போல் திறமையுள்ள, தந்திரசாலி யான முகவர். இதனால் அனைத்து மேலிடங்களிலும் இவருக்கு தொடர்பு களுண்டு. வெளிநாட்டு அரசுகள் தம து பிரசைகளை தமது நாடுகளுக்கு அழைத்தபோது, தாமும் வெளியேறலாம் என்ற போலின் கனவு நிறைவேறவில்லை. அதன் பின்னர் அவரில் பல மாற்றங்கள். தமது குடும்பத் துடன், ருட்சி சிறுபான்மையின உறவினர்களையும் தமது கோட்டலில் அகதிகளாக தங்க வைக்கின்றார்.

இடையில் சில அகதிகளுக்கும், இவரது குடும்பத்துக்கும் வெளிநாடு செல்ல சந்தர்ப்பம் கிடைத்தும், இவர் தமது குடும்பத்தை அனுப்பிவிட்டு தாம் செல்லாது அகதிகளுடன் தங்கு கிறார்.

ஆனால் சென்றவர்கள் பலர் விமா ன நிலையத்தை அ டை ய மு ன் ன ர் கொல்லப்படுகின்றனர், பலர் திரும்பி வருகின்றனர். போல் தம்மிடம் உள்ள ஸ்கொட்ச், கியுபன் சிகார், டொலர், நகைகள் எதுவும் எடுபடாமால் போக வும் சர்வதேச கொலையாளியாக கரு



தப்படுவீகள் என மிரட்டுகிறார். இது காடையினரின் அறிவின்மையை காட் டுகிறது.

ஒரு கட்டத்தில் ஹோட்டலை முற் றுகையிடும் கூற்று பெரும்பான்மையி னர் இராணுவத்தையும், காடையினரையும் சமாளிக்கமுடியாமல், தமது பெல்ஜிய முதாளியை தொலை பேசியில் அழைக்கிறார்,

முதலாளியின் கேள்வி

“யாரை அழைத்தால்நிறுத்தலாம்”

‘‘இவர்களுக்கு ஆயுதம் கொடுப்ப வர்கள் பிரான்ஸ், அவர்களால்தான் முடியும்.’’

முதலாளி பிரென்ச் அதிபருடன் தொடர்பு கொள்கிறார்.

சில செக்கனில் ஆக்கிரமிப்பாளர் கள் விலகுகின்றனர்.

100 நாட்களில் 800,000 கொலை களுக்கு சில செக்கன்களில் விடை தெரிந்துவிடுகிறது.

பின்னர் சமாதானம் என்ற பெயரில் ஐ.நா அட்டையுடன். கோட்டலில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு உண வு பொருட்கள் பெற தமது இன முகவரும், பெரும்பான்மையின போ ராளி முக்கியஸ்தரை சந்திக்கின்றார். அந்த உணவுக்களஞ்சியம், இப்பொழுது சித்திரவதைக் கூடமாக உள்ளது. பாதை மாறியதால் வாகனத்தை விட்டு இறங்கியபொழுது தடுக்கி விழுந்தது உடல்களின் மேலே. பாதையெங்கும் உடல்கள், பார்க்கும் இடமெங்கும் உடல்கள்.

மனதை நெருடும், மனதை உருக் கும், மனதை உறுத்தும் காட்சிகள்.

ருட்சி சிறுபான்மையினர், கூற்று பெரும்பான்மையினர் இவர்களது மொ ழியும் மதமும் கலாச்சாரமும் ஒத்த வையே. அப்படியாயின் இவர்கள் இரு இனமா? என்ற கேள்வி எழும்.

இலங்கை, இந்தியாவில் உள்ள சாதிமுறையை இது ஒத்தது. தொடர் ச்சியான ஒடுக்கு முறை இன வடிவம் எடுக்கும்.

பெல்ஜிய அரசு ருவண்டாவை கைப்பற்றியபொழுது அடையாள அட் டை வழங்கியது. அதை வைத்து தான் ஒருவர், என்ன இனம் என அடையாளம் காணமுடியும். பிரித்தா ளும் சூழ்ச்சியை பெல்ஜியம் கைக் கொண்டது.

உண்மைக் கதையை மையமாகக் கொண்ட இப்படத்தை ரெரி ஜோர்ஜ் இயக்கியுள்ளார். சம்பவங்களை இல குவாக்கிவிட்டார் என்ற விமர்சனமும் இவர் மேல் வைக்கப்பட்டுள்ளது..

100 நாட்களில் நடந்த பல அரசி யல் சக்திகளையும் விமர்சித்துள்ள னர். ஐக்கிய நாடுகளினதும், வெளி நாட்டு அரசுகளினதும் கவனிப்பின்மையையும் சுயநலத்தையும் விமர்சித்து அவர்களை குற்றவாளியாக்கியுள்ளனர். சுனாமியிலும், ஈராக்கிலும் கவனம் செலுத்திய இவர்கள் ஏன் ருவண்டாவில் அக்கறை காட்டவில்லை என்ற கேள்வி எழுகிறது.

ஐக்கிய நாடுகள் கொலனல் ஒலி வராக நடித்த நிக் நொல்ட் சிறப்பாக நடித்துள்ளார்.

போல் ருசபஜினாயாக நடித்த டொன் சடில் அதி அற்புதம். சர்வ சாதாராணமாக நடித்துள்ளார். மிகவும் கடினமான பாத்திரம். யதார்த்தமாக நடித்துள்ளார். ஒஸ்காரின் சிறந்த நடி கர் இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளார் டொன் சடில். ஆரசியல் குறுக்கே வராவிடின் இவர் சிறந்த நடிகராக தேர்வு செய்யப்படலாம்.

சிறந்த துணை நடிகை விருதுக்கு சோபியா

# கிழக்கு மாகாணத்தில் நடந்த படுகொலைகள்

| இல | முழுப்பெயர் | வயது | விலாசம் | சம்பவம் |
|---|---|---|---|---|
| 01 | வன்னியசிங்கம் மனோகரன் | 45 | முத்துக்கல் கரப்பொல, வெலிகந்த.<br>சேனையூர் கரப்பொல, வெலிகந்த. | 20.02.05 காலை 11.00 யளவில் சுட்டுக் கொலை. |
| 02 | விநாயகமூர்த்தி ஜெயகாந்தன்<br>வடிவேல் ரவிச்சந்திரன் | 35 | கிரான் மட்டக்களப்பு. | 20.02.05 சுட்டுக் காயம் பொலனறுவை வைத்தியசாலையில்<br>அனுமதிக்கப்பட்டுள்ளனர். |
| 03 | சுப்பிரமணியம் தயாநிதி | 29 | திருச்செந்தூர், கல்லடி. (தற்போது<br>நெற்களஞ்சியசாலை அகதிமுகாம்) | 19.02.05 காலை 9.00 மணியளவில் சுட்டுக்காயம் வாழைச்சேனை<br>வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். |
| 04 | பூபாலபிள்ளை ஹரிதாஸ் | 44 | அமரசிங்கம் வீதி, ஆரையம்பதி. | 28.02.05 பி.ப 8.45 மணியளவில் ரி.ஆர்.ஓ காரியாலயம் முன்பாக<br>சுட்டுக்கொலை. |
| 05 | கந்தையா கணேசராஜா | 24 | பிள்ளையார் கோவில் வீதி,<br>சந்திவெளி | 02.03.05 பி.ப 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில்<br>வந்தவர்களால் சுட்டுக் காயம் மட்டக்களப்பு வைத்தியசாலையில்<br>அனுமதி. |
| 06 | மயில்வாகனம் புலேந்திரன் | 26 | வார்ட் இல:15ஈ, வத்தாறுமூலை.<br>பிரதான வீதி, செங்கலடி.<br>அமரசிங்கம் வீதி, | 05.03.05 காலை 9.00 மணியளவில் மக்கள் வங்கிக்கு செல்லும்போது<br>ஐ.சி.ஆர்.சி காரியாலயம் முன்பாக சுடப்பட்டு காயம்.<br>05.03.05 அம்மன் கோயில் அருகே சுட்டுக்கொலை. |
| 07 | கந்தசாமி சந்திரன் | 27 | ஆரையம்பதி-03. | 05.03.05 கடத்தப்பட்டு சுட்டுக்கொலை. |
| 08 | சுதாசந்திரலிங்கம் மகலதாசன் | 32 | பன்குடாவெளி, செங்கலடி. | 06.03.05 வீட்டிலிருந்தபோது வெளியே அழைத்து சுட்டுக்கொலை. |
| 09 | முத்துலிங்கம் ரட்ணகுமார்<br>வேலாயும் இலங்கேஸ்வரன் | 26 | தனவாய், ஏறாவூர்.<br>திருச்செந்தூர், கல்லடி. | 05.03.05 இல் கொடுவாமடுவில் கடத்தப்பட்டார்.<br>07.03.05 பிரதான வீதியில் வைத்து சுட்டுக்கொலை. |
| 10 | அழகையா கிருபேஸ்வரன் | 33 | கிருஷ்ணன்கோவில்வீதி,திமிலைத்தீவு. | 08.03.05 காலையில் பஸ் தரிப்பிடம் அருகே சுட்டுக்கொலை. |
| 11 | தங்கராஜா சிவசங்கர் | 25 | கிருஷ்ணன்கோயில்வீதி,திமிலைத்தீவு. | 07.03.05 துப்பாக்கிச்சூட்டிலிருந்து உயிர் தப்பினார். |
| 12 | சித்திரவேல் சாந்தகுமார் | 35 | கட்டுமுறிவு, கதிரவெளி. | 07.03.05 துப்பாக்கிச்சூட்டிலிருந்து உயிர் தப்பினார். |
| 13 | சிவராஜா ரவிச்சந்திரன் | 39 | | 07.03.05 துப்பாக்கிச்சூட்டுக் காயம் வாழைச்சேனை |
| 14 | | 26 | ஓட்டமாவடி. | வைத்தியசாலையில் அனுமதி. |
| 15 | மொகமட் ஹுசைன்<br>அப்துல் ஜப்பார் | 25 | ஓட்டமாவடி.<br>ஓட்டமாவடி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை.<br>06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 16 | மொகமட் ஹனீபா | 42 | ஓட்டமாவடி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 17 | சாருதம்பி ஜெஸ்மர் | 30 | ஜுனியர் காலணி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 18 | அருட்சன் செல்வராஜா | 27 | வாழைச்சேனை. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 19 | விஜயசூரியா | 30 | ஓட்டமாவடி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 20 | ஹுசைன் (மனைவி) | 28 | கொளக்குணாவெளி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்கொலை. |
| 21 | விஜயசூரியா (மகள்-02) | 42 | பள்ளிவாசல் வீதி, ஓட்டமாவடி. | 06.03.05 வெலிகந்தை கொளக்குணாவெளியில் சுட்டுக்காயம். |
| 22 | ஏ.எச். ஹக்கீம் | 37 | பெரிய ஊறணி, இருதயபுரம். | 08.03.05 ஆட்டோவில் கடத்தப்பட்டு கொலை. |
| 23 | கிறீஸ்டி ஞானசூரியம் | 10 | | 09.03.05 பி.ப 8.00 சுட்டுக் காயம் மட்டு வைத்தியசாலையில் அனுமதி. |
| 24 | | 32 | ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | 11.03.05 இல் புளொட் காரியாலயம் மீது கிரனேட் வீச்சில் காயம் |
| 25 | சுப்பிரமணியம் பகீரதன் | 40 | ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | வைத்தியசாலையில் அனுமதி.<br>11.03.05 இல் புளொட் காரியாலயம் மீது கிரனேட் வீச்சில் காயம் |
| 26 | தம்பிராசா பாலசுந்தரம் | 45 | ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | வைத்தியசாலையில் அனுமதி.<br>11.03.05 இல் புளொட் காரியாலயம் மீது கிரனேட் வீச்சில் காயம் |
| 27 | நேசமணி சிவராசா | 33 | ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு. | வைத்தியசாலையில் அனுமதி.<br>11.03.05 இல் புளொட் காரியாலயம் மீது கிரனேட் வீச்சில் காயம் |
| 28 | பகீரதன் லக்ஷ்மிகாந் | 45 | கரபொல, செவனப்பிட்டிய. | வைத்தியசாலையில் அனுமதி.<br>14.03.05 பி.ப 8.00 மணியளவில் வீட்டில் வைத்து சுட்டுக்கொலை. |
| 29 | சுப்பிரமணியம் குணசேகரம் | 16 | கரபொல, செவனப்பிட்டிய. | 14.03.05 பி.ப 8.00 மணியளவில் வீட்டில் வைத்து சுட்டுக்கொலை.<br>15.03.05 பி.ப 8.30 மணியளவில் பிரதான வீதியில் சுட்டுக்கொலை. |
| 30 | செல்வநாயகம் செல்வநாதன்<br>மயில்வாகனம் ஜெயகணேஷ் | 21 | பிரதான வீதி, செங்கலடி. | 16.03.05 பி.ப 5.00 மணியளவில் மருதமுனை பிரதான வீதியில்<br>சுட்டுக்கொலை |
| 31 | தம்பிராசா ஜெகன் | 22 | மாங்கேணி, வாழைச்சேனை. | 16.03.05 பி.ப 8.00 மணியளவில் மருதங்கேணியில் சுட்டுக்கொலை.<br>10.03.05 மு.ப 12.00 வீட்டிற்கு முன்னால் வைத்து கடத்தப்பட்டார். |
| 32 | கந்தையா பத்மநாதன் | 23 | வார்ட்:05, வாகரை. | |
| 33 | வைத்தியலிங்கம் ரவீந்திரன் | 27 | கடுக்காய்முனை. | |
| 34 | | 25 | | |
| 35 | | 33 | | |

# கிழக்கில் கொலைகள் தடுத்து நிறுத்தப்பட

கிழக்கில் இடம்பெற்றுவரும் தொடர் படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற் காக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மட்டு-அம்பாறை மாவட்ட தலைவர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.


கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் தொடர்பாக கண்காணிப்புக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் வெறித்தனமான தாக்குதல்களால் கிழக்கிலுள்ள அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இப்பகுதியில் தினமும் கொலைகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக உண்மை நிலைமையை சில ஊடகங்களும் மூடிமறைப்பதோடு உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் வெளியிட்டு வருகின்றன.

புலிகள் செய்யும் அடாவடித்தனம் தொடர்பாக மௌனம் சாதிக்கும் இந்த ஊடகங்கள் புலிகளுக்கு ஏதாவது பாதிப்பென்றால் பெரிதுபடுத்தி செய்தி வெளியிடுகின்றன.

இந்த படுகொலைகளால் கிழக்கு வாழ் மக்கள் அச்சமடைந்துள்ளனர். என வே இந்த படுகொலைகள் மென்மேலும் தொடர விடாது தடுப்பதற்கு கண்காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென் அவர் மேலும் தெரிவித்தார். இக் கடிதத்தின் பிரதி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

**ஈ.பி.ஆர்.எல்.எப்**
**(பத்மநாபா-அணி)**



பிரார்த் தனையில்



நெற்களஞ் சியத்தில் தங்கியிருக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வளங்கு கிறார்கள்.

# தாமதிக்கமுடியாதது



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் கடந்த 50,60 வருடங்களாக நிகழ்ந்தவை வெட்கரமானதும் அவமானகரமானதும், கையாலாகாத்தனம் தாழ்வுச்சிக்கல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகும். இலங்கையின் இனப்பிரச்சினை ஏன் இவ்வளவு காலத்திற்கு இழுபட்டுச் சென்றது மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமைப் பிரச்சினை ஏன் தொடர்கதையாக இருந்தது என்பதற்கு இலங்கையின் அவமானகரமான சகிப்புத்தன்மையின்மையும் கற்பிதங்களை உண்மையென்று நம்புவதும் இனப்பெருமிதமுமே காரணமாய் அமைந்தன.



இலங்கையின் வளர்ச்சி என்பது சிங்கப்பூராக மாற்றுவோம் என்றெல்லாம் பேசுவது அல்லது சமதர்ம பொருளாதாரத்தை உருவாக்குவோம் என்பதெல்லாம் வெறும் வாய்ப்பந்தலாகவே அமைந்து விடும்.

இலங்கையினர் வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்படாதவரை இதனைச் செய்யவே முடியாது இலங்கையில் தமிழர்கள் சிங்களவர்கள் முஸ்லீம்கள் என்ற அடையாளங்களுடன் யதார்த்த இருப்பு ஒத்துக் கொள்ளப்பட வேண்டும். அந்த இருப்பு மதிக்கப்படவேண்டும். அதனை மதித்தால்தான் அனைவரும் இலங்கையராக வாழ முடியும் ஒரு சமூகம் தனது மொழி கலாச்சாரம் பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் வாழிடம் ஆகியவற்றுடன் உள்ள உறவு ஏற்றுக் கொள்ளப்பட்டால்தான் மக்கள் நெருங்கி ஐக்கியமாக வாழ்வார்கள். இல்லை நீ இரண்டாந்தரப்பிரஜை இது எங்களின் நாடு மாத்திரம் தான்.

எங்களை அண்டி வாழ்ந்தால் தான் உங்கள் சீவியம் என்ற அகங்காரம் அமைதியின்மையையும், வன்முறையையும் மாத்திரமே மிச்சமாக்கும். இனங்களின் தனித்துவத்திற்கான கோரிக்கைகள் நாட்டை ஒன்றாக வைத்திருப்பதற்கான அம்சமே தவிர பிரிப்பதற்கான அம்சம் அல்ல. தனிமனிதருக்கும் கூட அப்படித்தான் ஒவ்வொரு மனிதனிதும் தனித்துவம் அங்கீகரிக்கப்படுகையிலேயே மனிதர்கள் எல்லோரும் சமத்துவம் என்ற ரீதியில் ஐக்கியமாக வாழ முடியும் ஏற்றத்தாழ்வான பொருளாதார கட்டமைப்பில் எல்லோருக்கும் சமமான வளங்கள் என்பது சாத்தியமில்லை ஏற்றதாழ்வுகள் களையப்படவேண்டும் சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் மனிதர்கள் தாம் சமமானவர்கள் என்பதை நிர்பந்தத்தின் பேரில் ஒத்துக் கொள்ள நேரிடுகிறது அது சுனாமி போன்ற அனர்த்தங்களின் போது மாத்திரம் தான் அந்த கணங்களில் சக மனிதர்கள் மீது பரிவு ஏற்படுகிறது. கொஞ்சம் சுதாகரித்துக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும் போது மிருகக் குணம் மேலோங்கி விடுகிறது.

இலங்கையில் சமத்துவம் பொருளாதார, பால், இனரீதியில் எம்முன்னால் எழுந்துள்ளன. இருபத்தோராம் நூற்றாண்டிலும் இந்த உண்மை இந்த நாட்டவர்களுக்கு புரியாது போனால் இந்த நாட்டின் பின்னடைவுக்கு இங்குள்ளவர்களே பொறுப்பாளிகள். ஏக பிரதிநிதித்துவம் என்பது கூட கருத்துக்களின் சமத்துவத்திற்கு தனிமனித ஆளுமைக்கு ஒரு சமூகத்தின் தலைவிதி நிர்ணயிக்கும் அதன் உரிமைக்கு எல்லாவற்றிற்குமே எதிரானதாகும்.

இலங்கையில் 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் உருவானபோது பலர் வெகுண்டெழுந்தார்கள். அதனை சமூகங்களிடையே சுயாதீனமான ஒருமைப்பாட்டிற்கான ஒரு பொறிமுறையின் வடிவம் என்பதை இந்த நாட்டில் பெரும்பான்மையின கட்சிகள் புரிந்து கொள்ளத்தவறின.

அதேபோல் இந்த அதிகாரப் பரவலாக்கல் தமது ஏக அதிகாரத்தை மக்கள் மேல் திணிப்பதற்கு வசதியாக இல்லாத காரணத்தால் புலிகளும் அதனை எதிர்த்தனர். தமது நலன்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை என்ற காரணத்திற்காக முஸ்லீம் மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

1990இல் ஏற்பட்ட சூழ்நிலைகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் அத்தகைய கோரிக்கைகளை வலுவடையச் செய்தன. நீங்கள் எம்மை அண்டி சீவிக்க வேண்டியவர்கள் நீங்கள் ஒற்று வேலை செய்யும் சமூகம் அடிக்கடி கருத்ததை மாற்றிக் கொள்கிற சமூகம் என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது.

எனவே எமது கண்காணிப் பின்கீழ்தான் இருக்கவேண்டும் மேலதிகமாக நீங்களும் தமிழ் பேசுபவர்கள் தானே உங்களுக்கு புதிதாக என்ன வேண்டிக் கிடக்கிறது எங்களை நீங்கள் நம்புங்கள் உங்களை நாம் கண்காணித்துக் கொள்வோம் என்பது போல்தான் இந்த தமிழ் மனோபாவம் முஸ்லிம்களை அணுகிறது எங்களுக்கு சந்தேகம் வரும்படி நடந்தால் என்ன நடக்கும் என்பதையும் இந்த தமிழ் மனோபாவம் ஐயம் திரிபுற எடுத்து காட்டியது.

சிங்கள மேலாண்மையை நீங்கள் அனுசரிக்காவிட்டால் நீங்கள் அடக்குமுறைக்குள்ளாகுவீர்கள் நீங்கள் இந்த நாட்டில் வாழமுடியாது என்று வரலாறு பூராவும் சிங்கள மேலாதிக்கம் விளங்கப்படுத்த முனைந்தது.

போதாக்குறைக்கு மதவாதிகளும் இணைந்து கொண்டனர். பௌத்த தர்மத்தை தமிழர்களிடமிருந்து பாதுகாக்கவேண்டும் என்று துறவிகள் ஆவேச குரல் எழுப்பினார்கள்.

தமிழர்களினுள் ஆதிக்கம் பெற்ற குழு ஒன்று இங்கு தமிழரும் நானே தமிழரின் உரிமையும் நானே. தமிழரின் கருத்தும் நானே இதற்குப் புறம்பாக எவர் பேசினாலும் அவர் துரோகி என்றது அவரை கொன்றது அவர் சாகவேண்டியவர் என்றது. இந்த எல்லாம் நானே என்பதற்கு போதாது கடவுள்கொள்கைபோல் மதக்கோட்பாடுபோல் மாற்றப்பட்டு விட்டது.

தற்போது வடக்கு கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம். அதை எங்களிடம் தரவேண்டும் சுனாமி நிவாரணம் அது எங்களிடம் மாத்தரம் தான் தரவேண்டும் என்று அது அடம் பிடிக்கிறது. மக்களுக்கென்று எந்த முகமும் கிடையாது அதுவும் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் மனிதர்கள் தமது அடையாளங்களை வலுப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகரித்திருக்கும் காலத்தில் உலகளாவிய அளவில் மனிதர்களிடையே உறவுகள் ஊடாட்டங்கள் வலுவடைந்து வரும் காலத்தில் நான் தான் எல்லாம் மேய்பான் நான் சொல்வதே வேதாகமம் இதனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் பேரனர்த்தத்தை சந்திப்பாய் என்பது போல் தான் தமிழர்களின் அவல நிலை காணப்படுகிறது.

பக்கத்து நாடு இந்தியாவை பார்த்து படிப்பம் என்றுமில்லை அங்கு பல் இன மத மொழி பேசுபவர்கள் ஒருநாடாக வாழும் சாத்தியத்தை இங்குள்ளவர்கள் கற்க மறுக்கிறார்கள் சுவிற்சலாந்தில் சமஸ்டிமுறை ஆங்கில பிரெஞ்சு இத்தாலி மொழி பேசுபவர்களை சமஸ்டிமுறையில் இணைத்து வைத்திருக்கிறது யார் ராசா என்ற பிரிச்சினை இலங்கையுடன் ஒப்பிடுகையில் அங்கு பெரிதாக இல்லை என்றே கூறவேண்டும் இங்கு ஊருக்கொரு ராசா. தாசில் பண்ண பலருக்கு ஆசை ஜனநாயக வழியில் மக்களுடன் சேர்ந்து செயற்பட பலரும் தயாரில்லை அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்ற சம்பிரதாய ரீதியாக அப்பப்ப காட்டிக்கொள்ள மக்களுடன் சேர்ந்து போட்டோ எடுக்க தயாரே தவிர அவர்களுடன் வாழத்தயாராயில்லை.

சுனாமி நிவாரணப்பணிகள் இலங்கையில் ஏன் தோல்வியுற்றன என்றால் இலங்கையின் அதிகார கட்டமைப்பு அத்தகையது. தெய்வம் வழி விட்டாலும் பூசாரி வழிவிடாக் கட்டமைப்பு நிறையவே விண்ணப்ப படிவங்கள் கையெழுத்துக்கள் புறவி பரங்களுடன் சம்பந்தப்பட்டது.



அது மக்கள் ஏதும் செய்யச் சொல்லிக் கேட்டால் “குரங்கிட்ட மூத்திரம் கேட்ட கணக்குத் தான்” கொப்புக் கொப்பாய்தாவும். மக்களின நிவாரணப் பொருட்களை வெட்டுபவர்கள் சுனாமி நிவாரணப் பணிகளில் கெட்டித்தனமாக இருப்பதாய் ஆச்சரியம் தரும் செய்தியை சர்வதேச ஊடகங்கள் கூடச்சொல்லுகிறன.

இலங்கையின் காலனித்துவ காலநிர்வாக கட்டமைப்பு அடியோடு மாற்றியமைக்கப் படவேண்டும். முதலில் இலங்கையின் மிகப்படித்த பெரிய அதிகாரிகளை சுனாமி நடந்த இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களை கொண்டுபோய் காட்டவேண்டிய நிலைதான் இன்றும். இத்தனைக்கு முந்நூறு கிலோமீற்றர் சின்ன ஊர். சுனாமி பற்றி ஆராய்வதற்கு சர்வதேச மாநாடுகளுக்கெல்லாம் பிஸ்னஸ் கிளாசில் பறப்பார்கள் ஆனால் பக்கத்தில் உள்ள கடற்கரைக்கு இவர்கள் செல்லவே மாட்டார்கள் இத்தகைய சூழ்நிலையில் சுனாமி அகதிகள் எவ்வாறு தேறி எழும்பி நிற்பது.

தற்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு பற்றி பேசப்படுகிறது ஜனாதிபதி என்னவிலை கொடுத்தாவது சமாதானத்தை கொண்டு வரவேண்டும் என்று கூறியுள்ளார். இதனை மேலும் இழுத்துச் செல்லமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் வடக்கு கிழக்கில் தமது கையில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு மற்றவர்களை தீர்த்துக் கட்டி தமது பாசிச சர்வாதிகாரத்தை உலகம்போற்றி நிலைநிறுத்த தயாராகி நிற்கிறார்கள் எத்தகைய தீர்வும் ஜனநாயக உள்ளடக்கம் கொண்டதாக இருக்கவேண்டும். ●

---

**மார்ச் 20**

## தோழர் போல்ட்டன் குமார் அவர்களின் நினைவு தினம்



தோழர் போல்ட்டன் குமார் 1980களின் முற்பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வெகுஜன அமைப்பான ஈழமாணவர் பொது மன்றத்தினூடாக சமூக அரசியல் இயக்கத்தில் இணைந்து கொண்டவர். யாழ் குருநகர் தொகுதியை பிறப்பிடமாகக் கொண்ட குமார் குருநகர். பாசையூர் உட்பட்ட பகுதிகளிலும் யாழ் குடாநாட்டில் பரவலாகவும் தேசிய ஒடுக்குமுறை மற்றும் சமூக விடுதலைக்கான கருத்துக்களை முன்கொண்டு சென்றவர். ஒரு மக்கள் தளத்தை உருவாக்குவதில் அவர் கணிசமான பங்களிப்பை செலுத்தியிருந்தார். 1985 இல் அவர் மரணிக்கும் வரை மகத்தான பங்களிப்பை வழங்கியிருந்தார். தமிழ் தேசிய விடுதலைக்காகவும், சமூக மாற்றத்திற்காகவும், ஜனநாயக மனித உரிமைகளுக்காகவும் போராடியவர்கள் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். அன்னாரின் நினைவு தினம் மார்ச் 20ம் திகதியாகும். தோழர் றொபட் சுபத்திரன் அவர்களுடன் இணைபிரியா தோழராக அவர் செயற்பட்டார். பல்வேறு பணிகளை ஆற்றினார். ●

# கண்ணீர் அஞ்சலிகள்



## உமாகாந்தன்
## 1956 – 2004

தோழர் உமாகாந்தன் இலங்கையில் மனிதன் பத்திரிகைக் குழுவில் தனது சமூகப் பணியை ஆரமப்பித்தவர். அவர் கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் பிரான்சின் தலைநகர் பாரிசிற்கு வந்தவர். பிரெஞ்சு மொழியில் நல்ல பரிச்சயமுள்ள வர் தோழர் உமாகாந்தன். 1983 இற்குப் பின்னர் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்களுக்கு தன்னா லான உதவியைச் செய்தவர்.

பாரிசில் தமிழர் விடுதலைப் பேரவை என்ற அமைப்பில் நண்பர்கள் பலருடன் செயற்பட்டார். பின்னர் இவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்து கொண்டனர். முதலாவதாக சங்கே முழங்கு கலைஞர்களை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சி பரிசில் தோழர் உமாகாந்தனால் முன்னெடுக்கப்பட்டது.

பாரிசில் ''ஈழச்செய்திகள்'' என்ற ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மாதாந்த செய்தி வெளியீட்டை வெளிக்கொணர்வதில் பங்களித்தார். பல புலம்பெயர் சஞ்சிகைகளில் அவரது கட்டுரைகள் வெளிவந்தன. தொலைபேசி செய்தி சேவையையும் ஆரம்பித்து வைத்தார். ஜேர்மன், பிரான்ஸ் இடதுசாரிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தார்.

தமிழ் முரசு, ஈழமுழக்கம், கண்ணோட்டம் ஆகிய ஈ.பி.ஆர்.எல்.எப் சார் பத்திரிகைகளிலும் தாயகம், உயிர்நிழல், உட்பட தன்னார்வ சஞ்சிகைகளிலும் அவர் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். அவர் ஒரு கவிஞரும் கூட ஈ.பி.ஆர்.எல்.எப் இன் பெரும்பாலான ஐரோப்பிய பிரசுரங்கள் அவரால்தான் எழுதப்பட்டன. ஆரவாரம் காட்டாமல் வேலை செய்த மனிதர். அவரது விருப்பமான எழுத்து அனேகமாக சர்வதேச சமகால விடுதலை இயக்கங்கள் பற்றியனவாக இருந்தன.

சான்டிநிஸ்டா ஆட்சிக்காலத்தில் நிக்கரகுவா சென்று புரட்சியாளர்களுடன் சமூக மறுநிர்மாணப்பணிகளில் ஈடுபட்டவர். அவரது மரணத்திற்கு தனிமையும் ஒரு காரணமாக இருந்தது. சமூக வாழ்வில் ஈடுபட்ட பல மனிதர்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை போல இவருக்கும் ஏற்பட்டு, கடுமையாக நோய்வாய்ப்பட்டு, அண்மைக்காலமாக மரணத்துடன் போராடிக்கொண்டிருந்தார். புலம் பெயர்ந்த தளத்தில் தனக்கு வழமையான வாழ்க்கையைத் தேடிக் கொண்டவர் அல்ல உமாகாந்தன். தனது மனசாட்சி அழைத்த பாதையில் துன்பங்களினூடாக பயணித்தார்.

தோழர் உமாகாந்தனுக்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அஞ்சலிகள்

***ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)***

***சர்வதேச கிளைகளின் ஒன்றியம்***

## நினைவுகளாய்

மரணத்தின் பின்பான
உன் நினைவுகள்
எம் புகலிட வரலாற்றில்
தொலைந்து போகாப் பதிவுகள்

எரியும் எம் குஞ்சுத் தீவின்
சிறுபான்மை இனத்தவர்களின்
சமூக அரசியல் விடிவுக்காய்
தமிழ் முரசு சஞ்சிகையின்
ஆசிரியனாய் போராடப்
பணி புரிந்தது: நினைவுகளாய்.

கொலை செய்யப்பட்ட
சபாலிங்கத்தின் இறுதிச்
சடங்கில் கொலை வெறியர்களைச் சாடிய
உன் குரல் நினைவுகளாய்.

சர்வதேச அர-அதிகார-ஆதிக்க
வெறியர்களால் சிறுபான்மை இன மக்கள் மீது
மெற்கொள்ளப்பட்ட கொலைகள், மற்றும்
அரசியல் விரோதங்களை அம்பலப்படுத்திய
உனது கட்டுரைகள் நினைவுகளாய்

சர்வதேச செய்திகள் - அனைத்தையும்
உன் சுண்டுவிரல் விழிம்புவரை வைத்திருந்தும்
தமிழ் மீடியா வியாபாரிகளிடம்
விலைபோகாத உன் தனித்துவம் நினைவுகளாய்.

இறுதியான உன் உணர்வுப் பதிவாகிப்போன

"யுத்தம் யாருடனும் செய்யலாம்
புத்தகம் யாரும் வெளியிடலாம்
ஆனால் எழுத்து எந்த நேரமும்
இறுக்கமாக இதயத்தில் இருக்கும்''
எமது தோழர்கள் எமது நண்பர்கள் அப்படித்தான்

எம்முள் தொலைந்து போகா நினைவுகளாய்.
உன் நினைவுகள் இறுக்கமாக இதயத்தில் இருக்கும்.

-அசுரா-

## கலைச்செல்வன்
## 1960–2005



முகம், உயிர்நிழல் ஆகியவற்றினூடாக தனது ஆன்ம உணர்வுகளை வெளிப்படுத்திய கலைச்செல்வன் அவர்களின் மறைவு எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. வர்த்தலைவிளான் கனகசிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூன்றாவது புதல்வாரன இவர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் பழைய மாணவர்.

சமூக மாற்றத்துக்கானதும் தேசிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் தன்னை 1980 களின் முற்பகுதியில் இணைத்துக் கொண்டவர். 1984 இல் புலம் பெயர்ந்து பாரிஸ் வந்தார் அவர் தான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் அவ லம், அவற்றிலிருந்து விடிவு ஆகியவற்றில் தீரா அக்கறை கொண்டிருந்தார். ஒரு கலைஞனாக, ஒரு இலக்கியவாதியாக, ஒரு சமூகவியலாளனாக, ஒரு தொழிலாளியாக புலம் பெயர் மனிதர்களின் துயரம், நெருக்கடிகளுடன் தன்னை தொடர்புபடுத்தி வாழ்ந்தவர். பிரான்சில் தயாரிக்கப்பட்ட முகம் திரைப்படத்தில் என்றென்றும் மனதில் நிற்கும் அழுத்தமான முத்திரையை பதித்திருந்தார்.

உயிர் நிழல் ஊடாக மானிடர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தமிழ் சமூகத்தினுள் நிலவும் முரண்பாடுகள், தேசிய ஒடுக்குமுறை தொடர்பான புதிய கேள்விகளை தனது சகாக்களுடன் சேர்ந்து எழுப்பியிருந்தார். பின்நவீனத்துவம், அமைப்பியல் பற்றியும் ஆர்வம் கொண்டிருந்தார். பாரிசில் உயிர்துடிப்புடன் செயற்பட்ட சில உன்னதமான மனிதர்களை அன்மைக்காலத்தில் இழந்திருக்கிறோம். சபாலிங்கம், பாசிசத்திற்கு பலியானார். உமாகாந்தன் வாழ்வியல் சமூக நெருக்கடிகளில் போராடி குறைந்த வயதிலேயே மறைந்தார். தற்போது நாம் கலைச்செல்வன் அவர்களை இழந்திருக்கிறோம்.

கலைச்செல்வன் 1983 இற்குப் பின் புலம் பெயர்ந்து சமூகத்தின் நெருக்கடிகளுடன் தம்மை பிணைத்துக் கொண்டு சமகால வரலாற்றின் குறியீடாக வாழ்ந்தவர். இலக்கிய வட்டம், பெண்கள் சந்திப்பு, புலம் பெயர்ந்தவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், கலைச்செயற்பாடுகள், ஜனநாயகம், மனித உரிமை, சகல அடக்கு முறைகளுக்கும் எதிரான உந்துதலுடன் வாழ்ந்து மறைந்தவர்.

அவருடன் சமகாலத்தில் ஒன்றாக வாழ்ந்த தோழர்கள், நண்பர்கள் ஆகிய எங்களுக்கு அவருடைய இழப்பு ஒரு வெறுமையை தோற்றுவித்துள்ளது.

அன்னாரின் மறைவிற்கு அன்னாரின் மனைவி, மற்றும் குடும்பத்தார், நண்பர்கள், தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பத்மநாபா

## மரணம் எங்கே தாக்குகின்றது, என்று என்னிடம் கேட்கப்படும் கேள்விக்கு எனது பதில் - அது எனது இதயத்தை எனது மனதை எனது நினைவுகளை...

**மாயா அஞ்சலோ (கறுப்பினக் கவிஞை)**

கலைச்செல்வனின் திடீர் மரணச்செய்தி கேட்டு எம்மனதில் அதிர்ச்சி, சோகம் விம்மல் வியாபிக்க வாயடைத்து நிற்கின்றோம். எமது சோகத்தை மொழிபெயர்க்க வார்த்தைகளுமில்லை.45 வருடங்கள் மாத்திரமே நிரம்பிய அவரது வாழ்வு கலை, இலக்கியம், அரசியல் என்ற பரிமாணங்களைத் தொட்டு நிற்கின்றது. புகலிட இலக்கிய மற்றும் அரசியல் சூழலில் தன்னை முனைப்புடன் ஈடுபடுத்திக் கொண்டார் கலைச்செல்வன். ஈழத்தில் கருத்துச் சுதந்திர மறுப்பு, ஜனநாயக மறுப்பு குழி தோண்டி புதைக்கப்பட்ட போதிலும் சற்றேயெனினும் சுதந்திரமாக மூச்சுவிடக் கூடியதாகவிருந்த புகலிடத்தில் இலக்கியத்தையும் கருத்துப் பகிர்வுகளையும் உயிர்ப்பிக்க கணிசமான பங்கை கலைச்செல்வன் வகித்தார் என்பது மிகையாகாது.

வெறும் எழுத்து என்ற மாத்திரத்தில் நிற்காது, ஆயுத மொழியால் உயிர் பறிக்கப்பட்டவர்களிற்கு குரல் கொடுக்கவும் அவர் தவறவில்லை. 1988களிலிருந்து சுதந்திரக் கருத்துப் பரிமாறல்களிற்கு ஓர் ஊடகமாக விளங்கி வரும் இலக்கியச் சந்திப்பில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு செயற்பட்டதுடன், 1991ம் ஆண்டு இலக்கியச் சந்திப்பை முடக்கிவிட எடுக்கப்பட்ட முயற்சியிலிருந்து இலக்கியச்சந்திப்பை மீள உயிர்ப்பிக்க, செயற்பட்டவர்களில் ஒருவர் கலைச்செல்வன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரும், அவரது வாழ்க்கைத் துணையான லக்சுமியும் இணைந்து நடாத்திய எக்ஸில் நிறுவனத்தின் முதல் வெளியீடாக முதல் பெண்களின் தொகுப்பாக "மறையாத மறுபாதி"என்ற புகலிடத்துப் பெண்களின் கவிதைகளே தொகுக்கப்பட்டன. குறுகியகால இடை வெளிக்குள் இத்தொகுப்பைக் கொண்டு வருவதற்காக இரவுமுழுவதும் கண் விழித்து புத்தகப் பக்கங்களை சேர்த்துக் கட்டியது என்றும் நீங்கா நினைவுகள். நினைவுகள் மாத்திரமே உயிர்த்திருக்க உயிர் நீத்துச் சென்ற எம் தோழருக்கு எமது கண்ணீர் கலந்த அஞசலிகளைச் செலுத்தி கனத்த மனதுடன் விடைபெறுகிறோம்.

அவரது பிரிவில் துயருறும் தோழி லக்சுமிக்கும் கபிலனுக்கும் அவரது தாயார், சகோதரர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

**தோழிகள்.**
**பெண்கள்சந்திப்பு**

# ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

1. புலிகளின் ஏகோபித்த பாசிசக் கரங்களுக்குள் தமிழ்ச் சமூகம் அகப்பட்டிருக்கின்றமை, வடக்கு கிழக்கில் வாழும் சனத்தொகையில் எற்பட்டிருக்கும் மாற்றம், சர்வதேச சக்திகள் யுத்த நிறுத்தம், சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமூக சேவை, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்ற போர்வைகளில் இலங்கையின் அரசியல் பொருளாதாரத் தளங்களுக்குள் ஆழமாகக் காலூன்றி வருகின்றமை, தென்னிலங்கையின் அரசியலில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவும் மற்றும் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவினால் உருவாக்கப்பட்ட எதேச்சாதிகார அரசியல் யாப்பை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணமும் மற்றும் சிங்களவர் மத்தியில் சமாதானம் மற்றும் அரசியல் தீர்வு தொடாபாக ஏற்பட்டுள்ள அக்கறைகள் போன்ற பல்வேறு விடயங்களை கவனத்தில் கொண்டும் சாதகமான மாற்றங்களைக் கருதத்திற் கொண்டும் நாமும் எம்மில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள் வோமாக.

**நாம் இலங்கையர்கள்: நமது நாடு இலங்கை. சிங்களமும் தமிழும் இலங்கையின் பாரம்பரிய மொழி கள், இரண்டு மொழிகளும் இலங்கையின் எந்தப் பகுதி யிலும் சம உரிமையுடையவை: இலங்கையிலுள்ள பௌத்தம், இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் சமமாக மதிக்கப்பட வேண்டியவை: இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், இஸ்லாமியர் கள், மலையகத் தமிழர்கள் என தேசிய இனத்தவர்கள் உள்ளனர். இங்கு சிறுபான்மையாக உள்ள தேசிய இனத்தவர்களிற்கு அவரவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தியங்களை வரையறுத்து அங்கு மாநில சுயாட்சி அமைப்புகளை உருவாக்கி இலங்கையை ஒரு கூட்டாட்சி அரசிலமைப்பைக் கொண்ட ஒரு நாடாக அமைத்திடல் வேண்டும். இலங்கையின் அரச நிர்வாக, இராணுவ மற்றும் பொலிஸ் அமைப்புக்கள் அனைத்தி லும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் சனத்தொகைக் குக் குறையாது பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் அமைய வேண்டும். அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும் சட்டங் களாலும் நடைமுறைகளாலும் உறுதியாதல் வேண்டும். இவ்வாறான உணர்வுகளும் இதற்கான இயக்கங்களும் அவசியமர்கும். சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராகவும் குறுகிய நோக்கங்கள் கொண்ட பிரிவினை வாதத்துக்கெ திராகவும் இந்த இயக்கம் தயக்கமின்றியும் மயக்கமின் றியும் போராடல் வேண்டும்.**

# விடுதலையின் பேரால் தமிழ் மக்கள் அடிமைகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்

புலிகள் காரணமின்றி ஈவிரக்கமற்ற முறையில் மாற்று கட்சியினரைப் படுகொலை செய்ததனால் பெருந்தொகையான மாற்றுக் கட்சிகளை சேர்ந்த தமிழ் இளைஞர்களில் வசதி படைத்தவர்கள் நாட்டை விட்டு தப்பியோடினார்கள். பெருந்தொகையானோர் அவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்று வரை தெரியாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரும் மாற்றுக் குழுக்களை சேர்ந்த இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் என பழி சுமத்தப்பட்டனர். என்ன விதமான தகவல்களை புலிகளுக்கு எதிராக அவர்கள் கொடுத்திருக்க முடியும். புலிகள் எவ்வளவு பேரும் எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடியவர்களாக இன்று இருக்கிறார்கள்.

பாடசாலை அதிபர்கள், கல்விமான்கள், வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள்,அரச உயர் அதிகாரிகள், அரச அதிபர்கள் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு போதும் சிங்கள இராணுவத்தால் இந்த தராதரத்தில் ஆட்கள் கொல்லப்படவில்லை. இந்தக் கொலைகள் தமிழர்களுக்குள் தமிழர்களால் தமிழர்களுக்கு நேர்ந்தது.

ஒன்பது மாகாணங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழர் செறிந்து வாழ்கிறார்கள். இந்த இரு மாகாணங்களும் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஒன்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. மற்றது அரச கட்டுப்பாட்டில் உள்ளது.

22 பெப்ரவரி 2002இல் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் புலிகளும் அரசாங்கமும் ஒவ்வொரு தரப்பினரதும் கட்டுப்பாட்டில் உள்ளவற்றை மதித்து நடப்பதென்று, தமக்குள் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தினுள் யாரும் செல்ல முடியாது. புலிகளின் இரும்புத் திரைக்குப் பின்னால் என்ன நடக்கிறதென்று யாருக்கும் தெரியாது. எந்தத் தகவலும் அங்கிருந்து கசிவதற்கு வாய்ப்பில்லை. எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்களுக்கு புலிகளுடன் பேசும் போது புலிகளின் கட்டுபாட்டு பிரதேசமான கிளிநொச்சியில் அவர்கள் அமர்ந்திருந்து பேசும் இடத்தை தவிர அவர் வேறு எந்த பகுதிக்கும் சென்று வர அனுமதி கிடையாது.

சர்வதேச சமூகத்துக்கு சொல்ஹெய்ம் இந்த இரும்பு திரைகளுக்கு பின் எல்லாம் சரியாக இருக்கிறதென்று தெரிவிப்பாரா? அவர் அங்குள்ள மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு உத்தரவாதமளிப்பாரா? என்னால் உறுதியாக கூற முடியும். .அவரால் முடியாது.

**“21ம் நூற்றாண்டில் நவீன உலகில் ஐக்கிய நாடுகள் சபை இயங்கிக்கொண்டிருக் கும் சந்தர்ப்பத்தில் அடிமைத் தனம் ஒழிக்கப்பட்டு நீண்ட காலத்தின் பின், ஒரு சில நாடுகளை தவிர சகல நாட்டு மக்களும் பூரண ஜனநாயக உரிமையுடன் வாழும் இவ் வேளையில், விடுதலையின் பேரால் புலிகள் இங்கு தமிழ் மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கும் நிலை நமது நாட்டிலே காணப்படுகிறது”**

**(தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் அன்மையில் விடுத்திருந்த அறிக்கையிலிருந்து)**

# ஞானபீட பரிசு பெறும் தோழர் ஜெயகாந்தனுக்கு எமது வாழ்த்துக்கள்



மகாகவி பாரதிக்குப் பின் தமிழ் இலக்கியத்துக்கு உன்னத பங்களிப்பு வழங்கியவர்களில் தோழர் ஜெயகாந்தன் முக்கியமானவர். சமூகத்தின் அடிமட்டத்தில் உழலும் மக்களின் குரலாக அவரின் எழுத்துக்கள் அமைந்திருந்தன.

இந்திய சுதந்திர இயக்கத்திலும் இந்திய இடதுசாரி இயக்கத்திலும் அபரிமிதமான ஈடுபாடு கொண்டிருந்த தோழர் ஜெயகாந்தன் குறிப்பாக சமூகத்தின் முரண்பாடுகளை தனது சிறு கதைகளினூடாகவும் நாவல்களினூடாகவும் வெளிக் கொணர்ந்தவர் கடலூரைச் சேர்ந்த தோழர் ஜெயகாந்தன் மிகச் சாதாரண பாடசாலைக் கல்வியுடன் தமது சமூக அரசியல் இலக்கிய பயணத்தை ஆரம்பித்தவர்.

யதார்த்தவாத எழுத்துக்களில் அவர் சிகரங்களைத் தொட்டவர். சிறுகதை, நாவல், கட்டுரை என அவர் எழுதி குவித்துள்ளார். ரஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாயின் புத்துயிர்ப்பு தன்னில் ஏற்படுத்திய பாதிப்புக்களை அவர் குறிப்பிட்டது ஞாபகம். பாரதி, காந்தியடிகள், இந்தியாவின் இடதுசாரி இயக்கத்தின் முதுபெரும் தலைவர்கள் என அவர் பலரையும் சிலாகித்திருக்கிறார்.

சாதாரண கிராமப்புற நகரப்புற மனிதர்களின் வாழ்க்கையை அழுத்தமாக வெளிக் கொணர்ந்தது அவரது மாபெரும் பங்களிப்பு.

தனக்கென அவர் ஒரு தனித்துவத்தை கொண்டிருந்தார். சிறந்த பேச்சாளராகவும், ஏன் திரைப்பட முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார். இன்றும் கேரளத்தில் இருந்து வெளிவரும் மலையாள மனோரமா வருடாந்த தொகுப்பில் தமிழ் சினிமாவில் ஜெயகாந்தனின் கதைக் கருவில் உருவான உன்னைப் போல் ஒருவன் குறிப்பிடப்பட்டிருக்கும்.

அவர் 200க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் 40க்கு மேற்பட்ட நாவல்களையும் பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பாவம் அவள் ஒரு பாப்பாத்தி, சினிமாவுக்கு போன சித்தாளு, கங்கை எங்கே போகிறாள், ஊருக்கு நூறு பேர், பிரம்ம உபதேசம், கரு, ஒரு இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள் பல எமது ஞாபகத்தில் உள்ளன. அவர் ஞானபீட விருது பெற்றது அகில இந்திய அளவில் மாத்திரமல்ல தமிழ் கூறும் நல்லுலகமும் பெருமைப்படத்தக்கது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் நடைபெற்ற ஞாபகார்த்த இரங்கல் கூட்டமொன்றில் அவர் உரையாற்றும் போது புலிகளின் பாசிசத்தை ஒருசில வார்த்தைகளில் தெளிவாக குறிப்பிட்டார். “அவர்கள் இந்தியாவுக்கும் நண்பர்கள் இல்லை, சிங்களவர்களுக்கும் நண்பர்களில்லை, முஸ்லீம்களுக்கும் நண்பர்களில்லை, தமிழர்களுக்கும் நண்பர்களில்லை, தமக்கும் நண்பர்களில்லை” என்று குறிப்பிட்டார்.

# ஜெமினி எமது மனங்களை கட்டமைத்த கலைஞர்களில் ஒருவர்.

*காலத்தூயர்*



**களத்தூர் கண்ணம்மா, பாசமலர், இரு கோடுகள், போன்ற பல திரைப்படங்களில் அவர் தன்னை அழுத்தமாக பதித்துள்ளார். அவ்வைசண்முகி திரைப்படத்திலும் அவர் தனது முத்திரையை பதித்துள்ளார். சில தொடர்களிலும் அவர் நடித்துள்ளார்.**

**ஒரு காலகட்டத்தின் கலைஞர்களான பலர் மறைந்து விட்டார்கள் என்.எஸ் கிருஷ்ணன், ராஜம் கிருஷ்ணன், வி.கே. இராமசாமி, நகைச்சுவை நடிகர் சந்திரபாபு, நடிகவேள் எம்.ஆர். ராதா, கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவியரசு கண்ணதாசன், நடிகையர் திலகம் சாவித்திரி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நகைச்சுவை நடிகர்கள் தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன், நடிகை சுமிதா, மேஜர் சுந்தராஜன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கவிக்குயில் எம்.எஸ் சுப்புலட்சுமி, இன்னும் திரைப்படத்துறையின் சுமைதாங்கிகளாக நின்ற எண்ணற்ற துணைக் கலைஞர்கள் என காலம் என்னும் சிற்பி செய்த கலைஞர்கள் வரிசையில் தற்போது ஜெமினி மறைந்து விட்டார்.**

**இந்த திரைப்படங்களும் பாடல்களும் இசையும் எமது சில தலைமுறைகளின் மனங்களின் கட்டமைத்துள்ளன. ஒரு காலத்தின் பிரியாவிடை போன்ற துயரம் ஏற்படவே செய்கிறது.**

தி. சிறிதரன் 141a, மன்னார் ரோட், குருமன்காடு, வவுனியா அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.